★ பொருளாதாரத் தடை நீக்கப்பட்டிருந்தால் இராணுவ நடவடிக்கை நிறுத்தப்பட்டிருக்கும்

(கொழும்பு)
சிங்கள யுத்தக்கைதிகள் பரிமாற்ற விடயத்தில் வடபகுதிக்கான பொருளாதாரத் தடையை அரசு நீக்கியிருந்தால் அதன்மூலம் விடுதலைப் புலிகள் பலம்பெற்று விடுவார்
(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY
மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 24 இதழ் 143
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 08 07 1993

## யுத்த கைதிகளின் 4 உறவினர்கள் கொழும்பு பயணம்

(யாழ்ப்பாணம்)
புலிகளின் பாதுகாப்பிலுள்ள சிங்கள யுத்தக் கைதிகளின் உறவினர்களில் நான்கு பேர் இன்று கொழும்பு திரும்பியிருந்தார்கள்.
இவர்கள் இன்று பருத்தித்
(4-ம் பக்கம் பார்க்க)

## நான்கு மாவட்டங்களில் இராணுவத் தாக்குதல்

(கொழும்பு)
வடக்கு-கிழக்கில் நான்கு மாவட்டங்களில் கடந்த இரு தினங்களாக இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூட்டுப்படைத் தலைமையகம் நேற்று அறிவித்தது.
(4-ம் பக்கம் பார்க்க)

# வடக்கு-கிழக்குபிரச்னைக்கு இராணுவத் தீர்வு காணுமாறு நாடாளுமன்றில் வற்புறுத்து!

## சுதந்திரக்கட்சி எம்.பி. பேச்சு

(கொழும்பு)
இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு இராணுவத் தீர்வைக் காண வேண்டுமென்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. குணசேகரா நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வற்புறுத்தியுள்ளார்

வடக்கு - கிழக்குப் பகுதிகளிலுள்ள இராணுவத்தினர் தோட்டத்தொழிலாளரைவிட மிக மோசமான நிலையிலும், அடிப்படை வசதிகள் அற்ற நிலையிலும் உள்ளனர் என் யுத்தத்தினால் அரசு நிதி நெருக்கடியை எதிர்நோக்கி உள்ளது என்றும் திறைசேரியின் நிதி வடக்கு-கிழக்குப் பிரச்னைக்குச் செலவிடப்படுகின்றது என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ஹரேஸ்ட் ஹேரத்தும் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.
றும் அவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டுமென்றும் திரு. குணசேகரா மேலும் தெரிவித்தார்.
இதேவேளை வடக்கு கிழக்கு (ம-சி)

## ஐ. ஸி. ஆர். ஸி.யினுள் புலிகள் ஊடுருவல் செய்தி படு முட்டாள்தனமானது!

(யாழ்ப்பாணம்)
தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினுள் ஊடுருவியுள்ளதாக மனித உரிமைகளுக்கான யாழ். பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத் தலைவர் வெளியிட்டுள்ள அறிக்கையானது படுமுட்டாள்தனமானதென சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். வதிவிடப் பிரதிநிதி திரு. பீற்றர் சுவிற்ஸ் தெரிவித்துள்ளார்.
ஏற்கனவே டெய்லி நியூஸ்
(4-ம் பக்கம் பார்க்க)

## யுத்தக் கைதிகள் விடுதலையை அரசியல்வாதிகள் குழப்பக்கூடாது

### சர்வதேச செஞ்சிலுவைப் பிரதிநிதி கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)
"யுத்தக் கைதிகளின் விடுதலையை அரசியல்வாதிகள் குழப்பக்கூடாது. ஒருபோதும் அரசியலுடன் தொடர்புபடுத்தி இதனைக் சுமுகமான தொரு பேச்சுவார்த்தை மூலம் யுத்தக் கைதிகளை விடுவிப்பதே எமது நோக்கம்".
இவ்வாறு சர்வதேச செஞ்
(4-ம்பக்கம் பார்க்க)

★ தும்புப் பொருள்கள்

## இலங்கையிடமிருந்து இறக்குமதி; கேரள அரசு கடும் எதிர்ப்பு

(திருவனந்தபுரம்)
இலங்கையிலிருந்து தும்புப் பொருள்களை இறக்குமதிசெய்வதை உடன் நிறுத்துமாறு கேரள மாநில தும்புக் கைத் தொழில் அமைச்சர் திரு. சி. வி. பத்மராஜன் மத்திய அரசைக் கோரியுள்ளார்.
இலங்கையிலிருந்து இப் பொருள்களை இறக்குமதிசெய்வதன் மூலம் கேரளாவின் தும்புத் தொழில் பெருமளவில் பாதிக்கப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.
எனவே இத் திட்டத்தை மத்திய அரசு உடனடியாகக் கைவிடவேண்டுமெனவும் இது குறித்து கேரள மாநிலத்தைச் சேர்ந்த சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் மத்திய அரசுக்கு பலத்த நெருக்கடி கொடுக்க வேண்டுமெனவும் அவர் கோரியுள்ளார். (சி)

★ ராஜீவ் கொலை வழக்கு

## வழக்கறிஞருக்கு கொலைப் பயமுறுத்தல்!

(சென்னை)
ராஜீவ் காந்தி கொலை வழக்கில் எதிர்கள் தரப்பில் வாதாடும் வழக்கறிஞர் துரைசாமிக்கு கொலைப்பயமுறுத்தல் கடிதம் ஒன்று வந்திருப்பதாக அவர் தெரிவித்ததோடு பெயர்குறிப்
4-ம் பக்கம் பார்க்க)

## காமினி கட்சியுடன் பேச ஐ.தே.கட்சிக்கு அனுமதி

(கொழும்பு)
காமினி திசநாயக்காவின் ஜனநாயக ஐக்கிய தேசியமுன்னணியோடு ஐக்கிய தேசியக் கட்சி அரசு பேச்சுவார்த்தையில் ஈடுபடும் இதற்கான தீர்மானத்தை ஐக்கிய தேசியக் கட்சி நேற்றுமுன்தினம் நிறைவேற்றியுள்ளது.
(4-ம் பக்கம் பார்க்க)

## காமினி கட்சி ஐ. தே. க.வுடன் சேரும்

(கொழும்பு)
ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்கு அண்மையில் ஏற்பட்ட பலத்த இரு 'அடிகளை' தொடர்ந்து யூ.என்.பி.யில் சேரும் வாய்ப்பு அதிகரித்துள்ளது
ஒன்று அதன் தலைவர் திரு. அத்துலத்முதலி கொலையுண்டது. அடுத்தது அக்கட்சியின் முதல் எதிரியான திரு. பிரேம
(4ம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. க.வின் தேசிய அரசுக்கு சு. க. சிலர் ஆதரவு

(கொழும்பு)
ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் சிலர் ஐக்கிய தேசியக் கட்சி அமைக்கப் போகும் தேசிய அரசாங்கத்துக்கு ஆதரவு அளிக்கலாம் என்று அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.
நாடாளுமன்ற உறுப்பினர்கள் சம்பந்தமாக அந்தந்தக் கட்சிகளின் பொதுச் செயலாளர்கள் எடுக்கும் நடவடிக்கைகளை நீக்க வேண்டுமென்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி களுத்துறைத் மாவட்ட உறுப்பினர் நெவில் பெர்னாண்டோ நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப் போகும் இந்த புதிய யோசனையின் பிரகாரமே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்
(4-ம் பக்கம் பார்க்க)

## கிளாலி - பூநகரி படகு சேவை

(யாழ்ப்பாணம்)
கிளாலி - பூநகரி படகு சேவை இன்று வியாழக்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என விடுதலைப்புலிகளின் நிதித்துறை அறிவித்துள்ளது. (சி)

## வரிவிளம்பரம்

**கல்தேக்கு(கத்தாப்பு) விதை**

நாற்றுமேடைப் பயன்பாட்டுக்குக் கல்தேக்கு (கத்தாப்பு) விதை தேவை. தொடர்பு:- மிக்கவைற். (எ-3234)

**பாலாஜி புத்தகசாலை**

புத்தம் புதிய டிசைன்களில் கண்ணுக்கு மெருகூட்டும் நவீன ரகப் பிறந்த நாள் வாழ்த்து மடல்கள் விற்பனையாகின்றன. 15% தள்ளுபடி. உங்கள் தெரிவுக்கு இன்றே முந்துங்கள். 16 பஸ்நிலையம், யாழ்ப்பாணம். (ஏ 3229)

**விற்பனைக்கு**

பாடசாலை புத்தகங்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், பாடசாலை உபகரணங்கள், O/L, A/L கடந்த கால வினா விடைகள் மற்றும் விண்ணப்பப்படிவங்கள் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள ஒரே ஸ்தாபனம். தினேஸ் புத்தகசாலை, 19, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (ஏ-3232)

— பெயர் மாற்றம் —

யாழ் நகரை வசிப்பிடமாகக் கொண்ட "கணேசா" ஆகிய எனது பெயர் G.V. Kanesalinkam என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன்

G.V. Kanesalinkam,
298, காங்கேசன்துறைவீதி,
— யாழ்ப்பாணம். —

(சி 252)

சிறப்புப்
**பொது அறிவுப் போட்டி**
பரிசு ரூபா 3000/-
விபரங்களுக்கு!
**அறிவுக் களஞ்சியம்**
13 ஆவது இதழ் பார்க்க
(எ-3235)

**விற்பனைக்கு**

உருத்திர வீணை விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். இ. இராமச்சந்திரன், சதானந்தா வீதி, கும்பமூாவளை, அளவெட்டி. (கி-289)

**PITAWAKKA PLUS**

மதுபானத்தால் ஏற்படும் ஈரல் வியாதிகளுக்கும் வேறு மருந்துகளால் உடலில் ஏற்படும் நச்சுத்தன்மைகளுக்குமாக 9 வகை மூலிகைகள் அடங்கியது. கிடைக்குமிடம்: எஸ். ரி. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (எ-112)

**புலமைப் பரிசில் பரீட்சை (ஆண்டு-5)**

புலமை பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத்தரும் நிறுவனத்தால் ஒவ்வொரு ஞாயிறு தோறும் மாதிரி வினாத்தாள் (தமிழ், கணிதம்) வெளியிடப்படும். விடையளித்து தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். பதிவு செய்யவும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (கி- 288)

**வியாபாரம் பெருக**
**விளம்பரம் செய்க**

## வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்

(மூன்றும் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டது)

அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

1ம் பரிசு இல. 2973
2ம் பரிசு இல. 118
3ம் பரிசு இல. 1224

10 ஆறுதற் பரிசு இலக்கங்கள்:

| | |
|---|---|
| 1. 1257 | 6. 4829 |
| 2. 730 | 7. 1228 |
| 3. 966 | 8. 169 |
| 4. 4758 | 9. 513 |
| 5. 4509 | 10. 2411 |

★ பரிசுக்குரியவர்களுடன் கடிதமூலம் தொடர்பு கொள்ளப்படும்.

★ சீட்டிழுப்பு தொடர்பாக ஆதரவளித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

**சுருக்கெழுத்தாளர் பயிற்சி (தமிழ்/ஆங்கிலம்)**

தேசிய பயிலுனர் கைத்தொழிற்பயிற்சி அதிகார சபையின் ஆதரவுடன் விரைவில் நடைபெறவுள்ள மேற்படி பயிற்சிக்கான விண்ணப்பப் படிவங்களை இம் மாதம் 12- 13, 14ந் திகதிகளில் கழகப் பயிற்சி நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**சுருக்கெழுத்து தட்டச்சுக் கல்விக்கருத்தரங்கு**

யாழ்ப்பாணம், அல்வாய் ஆகிய இடங்களில் நடைபெறவுள்ள மேற்படி கருத்தரங்கில் பங்குபற்ற விரும்பும் இத்துறை சார்ந்த ஆசிரியர், மாணவர்கள், தொழில்புரிவோர் கடிதமூலம் 19-7-93 திற்கு முன் பதிவு செய்து கொள்ளவும்.

செயலாளர்.

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்
வதிரி, கரவெட்டி
06-07-1993. (கி-286)

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
## யாழ். கிளைத் தலைமையகம்
## சுருக்கெழுத்தாளர் பயிற்சி

01-07-93ம் திகதி பத்திரிகையில் விளம்பரமான மேற்படி விடயம் தொடர்பாக:

அ. தட்டெழுத்தாளர் பயிற்சி (ஆங்கிலம்):

ஆங்கிலத்தில் திறமைச் சித்தியுடன் தமிழ், கணிதம், உட்பட ஆறுபாடங்களில் க. பொ. த. (சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

ஆ. தட்டெழுத்தாளர் பயிற்சி (தமிழ்):

தமிழில் திறமைச்சித்தியுடன் ஆங்கிலம், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் க. பொ. த. (சா/தா) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

16—25 வயதிற்கு உட்பட்டவர்கள் தாம் வதியும் இ. செ. கி. சங்க, பிரிவுத் தலைவர்/செயலாளர் சிபார்சுடன் தமது விண்ணப்பங்களுடனும், சான்றிதழ்களுடனும் எமது பணிமனையில் 12-07-93 (பிற்பகல் 2-00 மணிக்கு நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

கௌரவ செயலாளர்.

73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
07-07-93. (ஏ-3237)

சன்மார்க்கசபை — குரும்பசிட்டி

## சன்மார்க்க நுண்கலை மன்றம்
## ஓவியக் கண் காட்சியும்
## சிறுவர் சித்திரப் போட்டிப்
## பரிசளிப்பும்

ஓவியக் கண்காட்சி:
இடம்: யா/இராமநாதன் கல்லூரி,
மருதனார்மடம்.

காலம்: 9, 10-07-1993 வெள்ளி, சனி
காலை 9-00 மணி முதல் பிற்பகல் 3-00 மணி வரை

தலைவர்: கலாகேசரி ஆ. தம்பித்துரை
(முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் — சித்திரம்)

கண்காட்சி சிறப்புரை
மூத்த ஓவியக் கலைஞர் வெ. சுந்தரமூர்த்தி

★ சன்மார்க்க நுண்கலைமன்ற மாணவரின் ஓவியங்கள், சிற்பங்களுடன் அரிய ஓவிய சிற்பத்துறை சார்ந்த நூல்களும் கண்காட்சியில் இடம் பெறும்.

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

பணிப்பாளர்.

(கி-294)

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக வருடம் ஆனிமாதம் 26-ம் நாள் [10-07-1993] சனிக்கிழமை உத்தர நட்சத்திரமும் ஸப்தமி திதியும் அமிர்தசித்த யோகமும் கூடிய சுபதினத்தில் நண்பகல் 10.00 மணி முதல் 11.30 மணிக்குள் வரும் கன்னிலக்கின முகூர்த்தத்தில்

| | | |
|---|---|---|
| மட்டுவில் வடக்கு | ★ | மயிலிட்டி |
| திரு. திருமதி தர்மலிங்கம் தம்பதிகளின் | ★ | திரு. திருமதி கிருஷ்ணசாமி தம்பதிகளின் |
| திருநிறைச் செல்வன் | ★ | திருநிறைச் செல்வி |
| **ஸ்ரீதரன்** | ★ | **குலராதா** |
| அவர்களுக்கும் | | அவர்களுக்கும் |

திருவருள் துணைகொண்டு திருமணம் நடாத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

திருமண மண்டபம்: Kathalisches Gemeinde Zentrum, Kirchstrasse, Kleinglattbach, 7143, Vaihingen.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

| | |
|---|---|
| திரு. திருமதி தர்மலிங்கம் [இலங்கை] | திரு. திருமதி கிருஸ்ணசாமி [இலங்கை] |
| திரு. த. ஸ்ரீபாஸ்கரன் [சுவிஸ்] | திரு. திருமதி சச்சிதானந்தமூர்த்தி [ஜேர்மனி] |
| திரு. த. ஸ்ரீவிக்கினராசா [சுவீடன்] | திரு. கி. குலராஜா [ஜேர்மனி] |
| திரு. த. ஸ்ரீமையூரன் [இலங்கை] | திரு. மூ. சிவகுமார் [பிரான்ஸ்] |
| Tel-07021/71605 | Tel-07042/12584 |

முக்கிய குறிப்பு: 10-07-1993 சனிக்கிழமை அன்று மட்டும் மணமகனின் பெற்றோரின் இல்லத்தில் ஓர் விருந்துபசாரம் இடம்பெறும். இதில் உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்களின் நல்வரவை நாடும்
திரு. திருமதி தர்மலிங்கம்
அரசினர் வைத்தியசாலை,
சாவகச்சேரி.

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

(தனிப்பட்ட அழைப்பிதழ் இல்லை) (கி 284)

யா/கலாநிதி ஆ. தியாகராசா
மத்திய மகா வித்தியாலயம்
காரைநகர்.
(யாழ். சன்மார்க்க மகாவித்தியாலயம்
யாழ்ப்பாணம்)

## சயம்பு தின விழா

இடம்: யாழ். ரசிக ரஞ்சன சபா மண்டபம்

காலம்: 93-07-09 வெள்ளிக்கிழமை
பிற்பகல் 2-00 மணி

தலைவர்: திரு. செ. தேவதாசன்
(கொத்தணி அதிபர்)

பிரதம விருந்தினர்: திரு. இ. அருளானந்தம் அவர்கள்
(உதவிக் கல்விப் பணிப்பாளர்,
பண்டத்தரிப்பு கல்விக்கோட்டம்)

கல்லூரி நூற்றாண்டு நினைவுப் பேருரை
பேராசிரியர் வே. தர்மரத்தினம் அவர்கள்
(யாழ். பல்கலைக்கழகம்)

திரு. செ. பத்மநாதன் அவர்கள்
(முன்னாள் அதிபர்)

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள்

★ **காரை ஒளி** ★

இயல் — இசை — நாடகம்

★ பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.

யா/கலாநிதி ஆ. தியாகராசா
ம. ம. வி, காரைநகர். (கி-292)

மணிவாக்கு

"அச்சத்தின் அடிப்படையில் பேச்சு நடத்தவும் கூடாது அதே போன்று பேச்சு நடத்த ஒருபோதும் அஞ்சவும் கூடாது"

— ஜோன் எவ். கென்னடி

# படையினரின் முற்றுகைக்குள் வீரப்பன் எந்நேரமும் கைதாகலாம்!

(சென்னை)

சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பன் பர்கூர் மலைப் பகுதியில் தமிழக மற்றும் கர்நாடக அதிரடிப் படையினர் துணை இராணுவத்தினரின் முற்றுகைக்குள் சிக்கியிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

1, 200 பொலிசார் இந்த முற்றுகையில் ஈடுபட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

வீரப்பனும் அவரது குழுவினரும் இந்த முற்றுகையை முறியடிக்க முடியாதபடி இராணுவமும் பொலிசாரும் பெரும் வியூகம் அமைத்துள்ள தாகவும் தெரிவிக்கப்படுகிறது

கடந்த சில நாட்களாக இம்மலைப் பகுதியில் வீரப்பனின் நடமாட்டம் இருப்பதாக கிடைத்த ரகசிய தகவலை அடுத்து பொலிஸாரும் இராணுவத்தினரும் பெரும் தேடுதல் வேட்டைகளை நடத்தி வருகின்றனர். இத் தேடுதலின் போது சில இடங்களில் வீரப்பன் குழுவினருடன் படையினர் நேரடியான மோதல்களில் ஈடுபட்டனர்.

தற்போது முற்றுகைக்குள் சிக்கியுள்ள வீரப்பன் தப்பியோட முடியாத நிலையிலிருப்பதால் எந்நேரமும் அவர் கைது செய்யப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

முற்றுகை நிலையிலுள்ள வீரப்பனும் அவரது குழுவினரும் இதுவரையும் எந்தவிதமான எதிர்த்தாக்குதலிலும் ஈடுபடவில்லை என்றும் படையினரின் முற்றுகை நீடித்துக் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (நி)

# நமது நோக்கு

## விரைந்து செயற்படுமா?

"சமாதானக் கதவுகள் திறந்திருக்கின்றன! போர் நிறுத்தத்திற்கு நாங்கள் தயார்; பேச்சுவார்த்தைக்கு நாங்கள் தயார்!" என கலாநிதி அன்ரன் பாலசிங்கம் பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

நெல்லியடியில் நடைபெற்ற கரும்புலிகள் நினைவுக்கூட்டத்தில் அவர் கூறிய கருத்துக்கள் அரசின் தீவிர பரிசீலனைக்குரியதாகும்.

"உங்கள் விடுதலை அமைதிப்பேச்சு ஆரம்பிப்பதற்கு வழிவகுக்கும் என மனதார நம்புகிறேன்!" என ஏற்கனவே கைதிகளின் முதற்கட்ட விடுவிப்பின்போது அவர் குறிப்பிட்டதையும் நினைவுபடுத்துகிறோம்.

பாரிஸ் மாநாட்டிற்குக் கடன் பெறச் சென்ற பிரதமருக்கு உதவி வழங்கும் நாடுகள் வழங்கிய ஆலோசனை என்ன?

"யுத்தச் செலவைக் குறைக்க வேண்டுமானால் வடக்கு கிழக்கில் அமைதியான சூழ்நிலை ஏற்பட வேண்டும் விரைவில் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்!"

இதேவேளை - புலிகளுடன் யுத்தநிறுத்தம் செய்து அமைதிக்கான பேச்சை ஆரம்பிக்கவேண்டும் என இந்திய எதிர்க்கட்சியான பாரதீய ஜனதாக்கட்சியும் கருத்து வெளியிட்டிருக்கின்றது

இந்தியாவின் வடபகுதியிலே மிகுந்த செல்வாக்குப்பெற்று தென் பகுதியிலும் வளர்ந்துவரும் இக்கட்சி அடுத்த தேர்தலில் ஆட்சியைப் பிடிக்கலாம் என்பது அரசியல் ஆய்வாளர்களின் கணிப்பு எனவே இக்கட்சியின் கருத்தை மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் கவனத்தில் எடுக்க வேண்டிய நிலை இலங்கை அரசிற்குண்டு.

யுத்தத்திற்கென தினசரி பலகோடிகளை விழுங்கிக் கொண்டு அதன் விளைவால் விலைகள் விஷம் போல ஏற, வாழ்க்கைச் செலவு அதிகரிக்க அரசு நீண்டகாலம் நிலைத்திருக்க முடியாது!

அரசுக்கு இது தெரிகிறது; எதிர்க்கட்சிகளுக்கும் இது புரிகிறது!

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும் நீங்கா நிலன் ஆள்பவனுக்கு!"

இது வள்ளுவன் அறிவுரை சரியெனப்பட்டதைச் செய்ய அரசுக்கு துணிவு வேண்டும்!

அது மாத்திரமல்ல, தூங்காமை - இழுத்தடிப்பால் - விரைவாகச் செயற்படவேண்டும்! செயற்படுமா அரசு?

## இராசி பலன்

08-07-1993

வியாழக்கிழமை

(தமிழுக்கு ஆனி 24)

சதுர்த்தி மு. ப. 8-52 வரை சதயம் பி. இ 4-42வரை வரை மரணயோகம் இராகுகாலம் பகல் 1-28 முதல் 2-58 வரை சுபநேரம் காலை 7-23 முதல் 8-58 வரை.

மேடம்: திடீர் வாய்ப்பு, அந்தஸ்து, மனத்தெளிவு.

இடபம்: தொழில் சிறப்பு, அறிவாற்றல், சகோதரபாசம்

மிதுனம்: பிறர் பேச்சு, மறைமுக கவலை, அலைச்சல்.

கடகம்: வாழ்க்கைப் பிரச்சனை, சலிப்பு, காரியத் தடை.

சிம்மம்: புதிய முயற்சி, கற்பனை, தொழில் புகழ்.

கன்னி: விசேஷ வல்லமை, கடின உழைப்பு, அதிக செலவு

துலாம்: நம்பிக்கை குறைவு பலரது இடையூறு ஞானம்.

விருச்சிகம்: தொழில் கஷ்டம், சகோதர வெறுப்பு, மனச்சுமை.

தனுசு: பழமை பேசுதல், தொழில் லாபம், பயண நன்மை.

மகரம்: மறதி குடும்ப எதிர்ப்பு இனசனதொல்லை.

கும்பம்: தொழில் அந்தஸ்து தெய்வ சிந்தனை, புகழ்.

மீனம்: மனசஞ்சலம், அடிமை நிலை, பணபற்றாக்குறை.

ஜோதிடர்

யாழ். கிளிநொச்சி மாவட்டங்களில்

# மலேரியா, மூளைக்காய்ச்சல் நோய்கள் அதிகரிப்பு!

## 2500 பேர் பாதிப்பு

(உடுவில்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் மலேரியா தடுப்பு இயக்கத்தினிடம் நுளம்புகளை அழிக்க பயன்படுத்தப்படும் மலத்தியோன் பவுடர் கையிருப்பு முடிவடைந்து விட்டதாகவும், மலத்தியோன் பாவனையின்மையால் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்து காணப்படுவதாகவும், அதன் காரணமாக வடபிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பகுதிகளில் மலேரியா, மூளைக்காய்ச்சல் நோய்கள் தீவிரமாக பரவி வருவதாகவும் தெரியவருகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு தேவையான 125 பெட்டி மலத்தியோன் பவுடருக்குப் பதிலாக கடந்தமாதம் சுமார் 65 பெட்டிகளே எடுத்துவரப் பட்டதாகவும் தெரிவிக்கப் பட்டது.

கடந்த மே மாதத்தில் மட்டும் ஆயிரத்துக்குக்கூடுதலான மக்கள் மலேரியா மூளைக்காய்ச்சல் நோய்களால் வடபிராந்தியத்தில் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலேயே மிக கூடிய அளவில் சுமார் 400 பேர் வரை! மலேரியாவால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் சுகாதார சேவைகள் பிரிவுக்குறிப்புக்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் கடந்த மாதம் மட்டும் ஆயிரத்து தொள்ளாயிரம்பேர் சாதாரண மலேரியாவினாலும் 83 பேர் மூளை மலேரியாவினாலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இதே காலப் பகுதியில் சுமார் 850 பேர் சாதாரண மலேரியாவினாலும், 75 பேர் மூளை மலேரியாவினாலும்பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(109-ரி)

## அறிவித்தல்

யாழ் மாவட்ட சி. ச. கூ. ச. சமாசத் தலைவரின் திருமண வைபவம் 10-07-93 சனிக்கிழமை நடைபெறவுள்ளது அன்றையதினம் பணியாளர்கள் திருமணத்தில் கலந்துகொள்ள இருப்பதனால் அலுவலகம் திறக்கப்படமாட்டாது. 09-07-93ந் திகதி வெள்ளிக்கிழமை நடவடிக்கைகள் இடம்பெறும். என்பதை அறியத் தருகின்றோம்.

பதில் மாவட்டச் செயலாளர்.

யாழ். மாவட்ட சி. ச. கூ. ச. சமாசம்.

(ஏ 3236)

ஓம்

குகமயம்

சாவகச்சேரி — டச்வீதி

## அருள்மிகு ஸ்ரீ பழனி ஆண்டவர்

ஆலயத்தின் 01-08-93 ல் நடைபெறும்

2-வது ஸ்ரீ பழனிவேல் பவனியை

முன்னிட்ட

## சிறப்புப் போட்டிகள் 1993

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட கல்வி பயிலும் மாணவர்களுக்கு —

1. பேச்சுப்போட்டி:- சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஆதரவிலும்
2. கவிதைப்போட்டி:- சாவகச்சேரி வர்த்தக சங்க ஆதரவிலும்
3. பொது அறிவுப் போட்டி:- சாவகச்சேரி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க ஆதரவிலும்
4. பண்ணிசைப் போட்டி:- சாவகச்சேரி நகரசபையின் ஆதரவிலும்

நடைபெறவுள்ளது.

விண்ணப்ப முடிவுத் திகதி: 15-07-93

★ பெறுமதிமிக்க பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் தொடர்பு கொள்க!

நிறுவனத்தினர்.

(கி-296)

# பதவி வெற்றிடங்கள்

யாழ் மாவட்டத்தில், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி ஆகியபகுதிகளில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களில் பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள், தகைமை உடையவர்களிடமிருந்து கோரப்படுகின்றன

1. முகாமையாளர்கள்
2. கணக்குப் பதிவாளர்கள்
3. உள்ளகக் கணக்காய்வாளர்கள்
4. காசாளர்கள்
5. களஞ்சியப் பொறுப்பாளர்கள்
6. சிட்டை எழுதுனர்கள்
7. விற்பனையாளர்கள்

## தகைமைகள்

### 1. முகாமையாளர்கள்

க. பொ. த. (சா/த) பரீட்சையில் சித்தியும், 2. வருட அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

4 வருட காலம் வர்த்தக முகாமையாளராகக் கடமை புரிந்த அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

### 2. கணக்குப் பதிவாளர்கள்

க. பொ த. (உ/த) பரீட்சையில் கணக்கியலிலும், வர்த்தகமும் நிதியும் ஆகிய பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட கணக்கியல் தராதரப் பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

கணக்குப் பதிவாளராக ஆகக் குறைந்தது 2 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்

### 3. உள்ளகக் கணக்காய்வாளர்கள்

க. பொ. த (உ/த பரீட்சையில் கணக்கியல், வர்த்தகமும் நிதியும் ஆகிய பாடங்களில் சித்தியும் 2 வருடத்திற்குக் குறையாத கணக்காய்வு அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

ஏதாவது ஒரு கற்கைநெறியில் கணக்காய்வில் சித்தியுடன் ஒரு வருட கணக்காய்வு அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

கணக்காய்வுத் துறையில் 3 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்

### 4), 5), 6), 7) ஆகிய பதவிகளுக்கு

ஆகக்குறைந்தது க. பொ. த. (சா/த) பரீட்சையில் சித்தியும். குறிப்பிடப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது ஒரு வருட அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

குறிப்பிடப்பட்ட துறையில் 3 வருடத்திற்குக் குறையாத அனுபவம் பெற்றிருத்தல்வேண்டும்.

அனுபவத்தையும் வேலைத்திறனையும் அடிப்படையாகக் கொண்டு சம்பளம் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி 15-07-1993

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி

மே/பா 'ஈழநாடு'

விளம்பர இல. ஏ-2238

மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

(எ- 3238)

# இலங்கை வந்து மடிவதா அல்லது பட்டினியால் இந்தியாவில் மடிவதா

## தமிழ் அகதிகளின் பரிதாப நிலை

(சென்னை)

இலங்கை திரும்பி குண்டடிபட்டு உயிர் துறப்பதா அல்லது இந்தியாவில் அகதிகளுக்கு வழங்கப்படும் உணவில் பற்றாக்குறை ஏற்பட்டு அதன் மூலம் பட்டினியால் மடிவதா என்றதொரு குழப்பமான நிலையில் தமிழகத்திலுள்ள ஆயிரக்கணக்கான இலங்கைத் தமிழ் அகதிகள் இருப்பதாக 'ஏ. எவ். பி' செய்தி தெரிவித்தது.

இலங்கை திரும்ப பெருமளவு அகதிகள் மறுத்து வருகின்றனர். எனினும் இவர்களை ஏதாவதொரு விதத்தில் திருப்பி அனுப்பும் சகல நடவடிக்கைகளையும் இந்திய மத்திய அரசும் தமிழக அரசும் ஏற்கவே மேற்கொண்டுவிட்டன.

நாம் திரும்பிச் சென்றால் இலங்கைப் படையினரிடம் சிக்கி மடிந்துவிடுவோமென அகதிகள் பலர் தமிழக அதிகாரிகளிடம் அழுது குமுறியும் அதனை அதிகாரிகள் புறக்கணித்துவிட்டனராம். இலங்கை சென்று ஏதாவது செய்யுங்கள் இங்கு ஒரு நிமிடமும் இருக்கவேண்டாமென கூறி விட்டனராம்.

இதற்கிடையில் தமிழகத்திலிருந்து அகதிகளை திருப்பி அனுப்புவதை நிறுத்துமாறு மத்திய, மாநில அரசுகளை வற்புறுத்தும் நோக்கில் பல மனிதாபிமான அமைப்புகள் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (சி)

# கனடாவில் தமிழர் மத்தியில் பதற்றம் அதிகரித்துவருகிறது

(ரொறன்ரோ)

கனடாவில் தமிழர்கள் மத்தியில் மீண்டும் பதற்ற நிலை பெருமளவில் அதிகரித்து வருவதாக அங்கிருந்து வெளியாகும் தமிழ் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

கடந்த சில வாரங்களாக தமிழர் பெருமளவில் தங்கியிருக்கும் நகர் பகுதியில் இரவு வேளையில் தமிழர் வீடுகள் மீது சரமாரியான துப்பாக்கிச் சூடுகள் நடாத்தப்பட்டு வருகிறதாம்.

இரவு வேளைகளில் பல தமிழர்கள் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டுமுள்ளனராம். தாக்கப்பட்டவர்கள் பலர் கூறுகையில், தம்மை தாக்கியவர்கள் இலங்கைத் தமிழ் இளைஞர்களே எனவும் கூறியுள்ளனர்.

இவ்வாறான பல சம்பவங்களில் ஈடுபட்டதாக சுமார் 30 தமிழ் இளைஞர் கனடா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனராம். இவை குறித்து பெருமளவு தமிழர் பொலிஸில் புகார்கள் கொடுத்தும் வருகிறார்களாம். (சி)

# கொழும்பில் தமிழர் கப்பம் கட்டும் அவலம்

(கொழும்பு)

கொழும்பில் பல பகுதிகளிலும் வசிக்கும் தமிழர் படையினருக்குக் கப்பம் கட்டும் நிலையிலுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழ் இளைஞர்கள் பெருமளவில் கைது செய்யப்பட்டு வருவதால் தமது பிள்ளைகளையும், நெருங்கிய உறவினர்களையும் படையினரிடமிருந்து பாதுகாக்க அவர்களுக்குப் பெருமளவு பணத்தினைக் கப்பமாகச் செலுத்தி வருகிறார்களாம்.

முரண்டு பிடிக்கும் தமிழர் கைது செய்யப்பட்டு முகாம்களிலும், தடுப்புக் காவலிலும் தாக்கப்பட்டும் பல வாரங்களின் பின்பே விடுவிக்கப்படுகிறார்களாம். (சி)

4 உறவினர்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துறைமுகம் சென்று அங்கிருந்து பலாலி சென்று விமான மூலம் கொழும்பு திரும்புவர்.

ஏனையோர் தொடர்ந்தும் யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (162 – சி)

நான்கு மாவட்டங்களில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி நான்கு மாவட்டங்களிலும் குறிப்பாக காய்டுப் பகுதியில் இப்படை நடவடிக்கை இடம் பெற்றுள்ளதாக ஏஜென்ஸிசெய்திகள் தெரிவித்தன.

மட்டக்களப்பில் கடந்த இரு வாரங்களாக பல பகுதிகளிலும் புலிகளுக்கும்-படையினருக்கும் கடும் மோதல் இடம் பெற்று வருவதும் தெரிந்ததே. (சி)

ஐ. ஸி. ஆர். ஸி.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரிகையில் ருகுணு கப்பலில் விடுதலைப் புலிகள் கொள்ளையடித்ததாக வெளிவந்த செய்தி பொய்யானது எனவும் இச்செய்தியும் இது போன்றதேயெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சிங்கள யுத்தக் கைதிகளின் விடயம் அரசாங்கத்திற்கும்- விடுதலைப்புலிகளுக்குமிடையிலான விடயம் எனவும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கும், கைதிகள் விடுதலைக்கும் எதுவித தொடர்புமில்லை எனவும் அவர் கூறினார்.

இதேவேளை யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் குழு என்ற அமைப்புக்கும் பல்கலைக்கழகத்திற்கும் எதுவித தொடர்புமில்லையென்றும் இப்படியான அமைப்பு பல்கலைக்கழகத்தில் இல்லை என்றும் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா சமீபத்தில் ஒரு அதிகார பூர்வமான அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த அறிக்கையின் பிரதிகள் சர்வதேச மன்னிப்புச் சபைக்கும் உலக மனித உரிமை ஸ்தாபனங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

முன்பொரு காலம் யாழ். பல்கலைக்கழக போதனாசிரியர்களாகக் கடமையாற்றிய ஒரு சிலர் யாழ். பல்கலைக்கழகத்தின் பெயரை உபயோகித்து விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும் தமிழ் மக்களின் போராட்டத்திற்கு மாறாகவும் காலத்திற்குக் காலம் கொழும்பிலும் வெளிநாடுகளிலும் இருந்து அறிக்கைகள் வெளியிட்டு வருகின்றனர். இவர்களது அறிக்கைகளை கொழும்புப் பத்திரிகைகள் சில முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்து வருவதும் இங்கு சுட்டிக் காட்டப்பட்டது. (கே-சி)

# சுபாஸ் சந்திரபோஸின் சிலை குண்டுவைத்து தகர்ப்பு

(இம்பால்)

இந்தியாவில் மணிப்பூர் மாநிலத்தின் தலைநகர் இம்பாலுக்குத் தெற்கே நிறுவப்பட்டிருந்த நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் வெண்கலச் சிலையை விஷமிகள் குண்டு வைத்துத் தகர்த்துவிட்டனர்.

அந்தச் சிலையும், அதன் கீழ் வைக்கப்பட்டிருந்த பளிங்குக் கல்லும் குண்டு வெடிப்பினால் முற்றாகச் சிதைந்து போயின.

இச்செயலைக் கண்டித்த மணிப்பூர் மாநில முதல்வர் இது தேச விரோதிகளின் அழிவு வேலையாகும் என்றார். (கே-சி)

பொருளாதாரத் தடை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் எனவும் இதனால் வடக்கு-கிழக்கில் நடைபெறும்போரை நிறுத்தவேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்படுமெனவும் இராணுவதளபதிகள் அரசுக்கு பெரும நெருக்கடி கொடுத்திருந்ததாக பிரபல சிங்களப் பத்திரிகையாளர் ஒருவர் பி.பி.ஸி ஆங்கில சேவைக்கு வழங்கிய பேட்டியில் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்: எனினும் இந்த யுத்தக் கைதிகள் பரிமாற்ற உடன்படிக்கை ஏற்பட்டதும் வவுனியா தடை முகாம் ஊடாக தடைசெய்யப்பட்ட பொருட்களான 60 பரல் டீசல் எண்ணெயும் மற்றும் பொருட்களும் வடபகுதிக்குச் சென்றடைந்துவிட்டன.

இராணுவத்தினர் மாத்திரமின்றி, சில எதிர்க்கட்சிகளும் தடைசெய்யப்பட்ட பொருட்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு அனுப்புவதை எதிர்த்தனர்.

தற்போது உடன்பாடு முறிவுற்றநிலை ஏற்பட்டபோதும் கைதிகளின் உறவினர்களை ஏதாவது ஒருவழிகண்டு கொழும்புக்கு அழைக்க வேண்டும் எனவும் அவர் கூறினார். கே-சி

காமினி கட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாசாவின் கொலை.

இக்கட்சியினர் எதிர்த்த முக்கியமானவர் கொலையுண்டதனால், இவர்கள் யு. என். பி. யுடன் இணைவதை வலியவே விரும்புவர். எனினும் யு. என். பி. யுடன் இணையும் போது ஐ. ஐ. தே. முன்னணியினர்க்கு என்னவிதமான பதவியை கொடுக்கப்போகிற தென்பதை பலர் எதிர்பார்க்கின்றனர். (கே-சி)

ராஜீவ் கொலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிடப்படாத அக்கடிதத்தையும் அவர் நீதிபதியிடம்நேற்று சமர்ப்பித்துள்ளார்.

இக்கொலை வழக்கிலிருந்து விலகாவிட்டால் அவர் கொலை செய்யப்படுவார் என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

யூன், 26ம் திகதியிட்ட அக்கடிதத்தில், ராஜீவ் காந்தி கொலை நாட்டிற்கு அதிர்ஷ்டமானது. இதில் குற்றஞ்சாட்டப்பட்ட அனைவரும் இக்குற்றத்தை செய்தவர்களே அவர்களை நிரபராதி என்று நிரூபிக்க முனைந்தால் நீங்கள் ஒழித்துக்கட்டப்படுவீர்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்தது,

இதேவேளை சிறப்பு நீதிபதி எம். சித்திக் தலைமையில் நடைபெறும் இவ்வழக்கு விசாரணையில் வாதாடிய மற்றுமொரு எதிர் தரப்பு வழக்கறிஞர் திரு. சென்னன் தடா சட்டம் அரசியல் சட்டத்துக்கு முரணானது என உச்ச நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் போது இவ்வேளையில் அத்தீர்ப்பு வரமுன் அந்தச் சட்டத்தின் கீழ் கைதாகி ஒப்புதல் வாக்கு மூலம் பெற்றுக் கைதிகளை விசாரிப்பதை நிறுத்தவேண்டும் என்று கூறினார். (கே-சி)

# லலித் கொள்கையை ஸ்ரீமணி முன்னெடுப்பார்

(கொழும்பு)

காலஞ்சென்ற லலித் அத்துலத் முதலியின் கொள்கைகளை கோட்பாடுகளை தாம் தொடர்ந்து முன் எடுத்துச் செல்லப் போவதாக திருமதி ஸ்ரீமாணி அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஐக்கிய தேசியக் கட்சி அமைக்கப்போகும் தேசிய அரசாங்கத்தில் இணையப்போகின்றது என்ற கருத்துச்சே ஸ்ரீமாணி அத்துலத்முதலி மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

இதனால் ஜனநாயக ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இந்தக்கட்சி தேர்தலில் தனிக்கட்சியாக நின்று போட்டியிட்டது என்றும் அவர் மேலும் கூறினார். (ம-சி)

ஐ. தே. க. வின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் சேரும் வாய்ப்புண்டு என்று கருதப்படுகிறது.

இந்தத் தீர்மானத்துக்கு ஸ்ரீமாவும் பொதுசன ஐக்கிய முன்னணியும் எதிர்ப்புத்தெரிவித்துள்ளன.

இதேவேளை தெவிக பெர்ணாண்டோவின் இந்தயோசனை தேசிய அரசாங்கம் அமைப்பதற்கு ஊக்கமளித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. 16ம் திகதி இந்தத் தீர்மானம் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படவிருக்கிறது. (ம-சி)

காமினி கட்சியுடன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பேச்சுவார்த்தை சம்பந்தமான ஒழுங்குகளை மேற்கொள்வதற்கு ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கவிற்கு முழு அதிகாரமும் அளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

மேல் மாகாண சபையின் ஆட்சியை கைப்பற்றுவதற்கும், தெற்கு வடமேல் மாகாண சபைகளின் அதிகாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் இணைவு முக்கியமாக கருதப்படுகின்றது என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர் (ம-சி)

## வீரச்சாவு

திருமலை)

திருகோணமலை மாவட்டம் கிற்றூறு என்ற இடத்தில் கடந்த ஞாயிறு விடுதலைப் புலிகள் சென்று கொண்டு இருந்தபோது ராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தியதில் வீரவேங்கை சுகிரா அல்லது வவுனியா ராசராஜா ஜெயகுமார் (4ம் வட்டாரம்பட்டைப் பறிச்சான்) வீரச்சாவடைந்தார்.

இவருக்கு புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். (கே-சி)

## தென்னாபிரிக்காவில் 100 பேர் பலி

(டேர்பன்)

தென் ஆபிரிக்காவில் நேற்று முன்தினம் போட்டிக் குழுக்களிடையே நடந்த வன்செயலில் 100 க்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## வி. பி. சிங் கைது

(லக்னோ)

ஜனதா தளத்தின் முக்கிய தலைவர்களான திரு வி. பி. சிங், திரு ராமவிலாஸ் பாஸ்வான் மற்றும் கட்சியின் பல உறுப்பினர்களும் தொண்டர்களும் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

பேரணியொன்றில் உரையாற்ற இவர்கள் ஹைதராபாத் சென்ற சமயம் அமைதி சூழ்நிலையை குழப்ப முயன்றார்கள் என்ற வகையில் கைதாகி பின்னர் விடுவிக்கப்பட்டனர். கே-சி)

## இனப்பிரச்னை குறித்து ஈரான் ஜனாதிபதிக்கு விளக்கம்

(தெஹ்ரான்)

இலங்கை இனப்பிரச்னை குறித்து ஈரான் சென்ற இலங்கை தூதுக்குழு ஈரான் ஜனாதிபதி அலி அக்பர் ஹாஸ்மி ரப்ஸன் ஜானிக்கு விரிவாக விளக்கிக் கூறியுள்ளனராம்.

யுத்தக் கைதிகள்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

சிலுவைச்சங்க யாழ் மாவட்ட பொறுப்பாளர் எமதுநிருபருக்குத் தெரிவித்தார். யுத்தக் கைதிகளின் விடுதலை விவகாரம் முறிவடைவதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமே காரணமென கொழும்புப் பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டு வருவது குறித்து அவரிடம் கேட்கப்பட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்: நாம் ஒரு பொதுச்சேவை செய்யும் சர்வதேச ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள் பொதுச் சேவை செய்யும் நோக்குடனேயே இங்கு வந்துள்ளோம். எமக்கு யாரும் எதிரிகளில்லை. நாங்கள் அரசியலிலோ, அரசியல்பேச்சுவார்த்தைகளிலோ ஈடுபடமாட்டோம்.

இங்கு தங்கியிருக்கும் கைதிகளின் உறவினர்கள்கொழும்பு திரும்ப மறுத்து வருகிறார்கள். நாங்கள் தினமும் அவர்களைச் சென்று சந்தித்து வருகிறோம். கைதிகளின் விடுதலை குறித்து தொடர்ந்தும் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறதென்றார். (162-சி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993ம் ஆண்டு யூலை மாதம் 08-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the Genneral Post office, Sri Lanka under Licence Number B/10336/B